**சுருக்கம்**

பொது விநியோகத் திட்டம் – மண்ணெண்ணெய் – புதிதாக வழங்கப்பட்டுள்ள தகுதியுள்ள அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் ஆகஸ்ட் 2008 மற்றும் செப்டம்பர் 2008 ஆகிய இரு மாதங்களுக்கு மட்டும் கூடுதலாக தலா ஒரு லிட்டர் வீதம் மண்ணெண்ணெய் வழங்கல் ஆணை வெளியிடப்படுகிறது.

– – – – – – – – – – – – – – – – – – – – – – – – – – – – – – – – – – – – – – – – –

**கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (சி2) துறை**

**அரசு ஆணை(டி) எண்: 268** **நாள்: 31–7–2008**

**படிக்கவும் :**

உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளரின் கடிதம் எண்.ஒ2/22757/2008 நாள் 25–7–2008.

––––

**ஆணை:**

மைய அரசு நடப்பு காலாண்டிற்கு பொது விநியோகத் திட்டத்திற்கு 1,79,555 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் ஒதுக்கீடு செய்துள்ளது. உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையர் மேலே படிக்கப்பட்ட தனது கடிதத்தில், புதிதாக வழங்கப்பட்டுள்ள தகுதியுள்ள குடும்ப அட்டைதாரர்கள் அனைவருக்கும் தற்போது வழங்கப்பட்டு வரும் தலா இரண்டு லிட்டர் மண்ணெண்ணெய் வீதம் 60,982 கிலோ லிட்டர் மாதாந்திர தேவை ஏற்படுகிறது என்றும் ஆணையர் தெரிவித்துள்ளார்.

2. ஆகஸ்ட் 2008 மற்றும் செப்டம்பர் 2008 ஆகிய இரண்டு மாதங்களுக்கு 1,21,964 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் தேவைப்படுகிறது. இக்காலாண்டு ஒதுக்கீட்டில் மீதமுள்ள அளவு 1,31,051 கிலோ லிட்டர் எனவும், இதில் இரண்டு மாதங்களுக்கு தேவை 1,21,964 கிலோ லிட்டர் போக 9087 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் மீதமுள்ளது. இதனை இக்காலாண்டிற்குள் அதாவது செப்டம்பர் 2008 மாதத்திற்குள் உபயோகப்படுத்த வேண்டியது அவசியமாகிறது. தகுதியுள்ள புதிய குடும்ப அட்டைதாரர்களுக்கு தற்போது வழங்கப்படும் இரண்டு லிட்டருடன் கூடுதலாக ஒரு லிட்டர் மண்ணெண்ணெய் அதாவது தலா மூன்று லிட்டர் வீதம் மண்ணெண்ணெய் வழங்கிடும்பட்சத்தில் 65,254 கிலோ லிட்டர் தேவை ஆகும். ஆகஸ்ட் 2008 மற்றும் செப்டம்பர் 2008 ஆகிய இரண்டு மாதங்களுக்கு தேவையான

மண்ணெண்ணெய் அளவு 1,30,508 கிலோ லிட்டர் எனவும் உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையர் தெரிவித்துள்ளார்.

3. இக்காலாண்டுக்கான (ஜுலை–செப்டம்பர் 2008) மைய அரசின் ஒதுக்கீட்டினை முழுமையாக உபயோகப்படுத்திடும் நோக்கில் ஒரு சிலிண்டர் மற்றும் சிலிண்டர் இணைப்பு இல்லாத தகுதியுள்ள புதிதாக வழங்கப்பட்டுள்ள குடும்ப அட்டைதாரர்கள் அனைவருக்கும் ஆகஸ்ட் 2008 மற்றும் செப்டம்பர் 2008 ஆகிய இரண்டு மாதங்களுக்கு மட்டும் வழக்கமான விநியோக அளவுடன் கூடுதலாக ஒரு லிட்டர் அதாவது தலா மூன்று லிட்டர் மண்ணெண்ணெயை 1–8–2008 முதல் வழங்கலாம் என்றும், எனவே இதுகுறித்து அரசின் ஆணையை வழங்குமாறு உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் ஆணையாளர் அரசை கேட்டுக்கொண்டுள்ளார்.

4. மேலே பத்தி 3–ல் உள்ள உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையரின் பிரேரணையை ஏற்று, ஒரு சிலிண்டர் மற்றும் சிலிண்டர் இணைப்பு இல்லாத தகுதியுள்ள புதிதாக வழங்கப்பட்டுள்ள குடும்ப அட்டைதாரர்கள் அனைவருக்கும் ஆகஸ்ட் 2008 மற்றும் செப்டம்பர் 2008 ஆகிய இரண்டு மாதங்களுக்கு மட்டும் ஏற்கனவே அரசு நிர்ணயித்துள்ள வழக்கமான விநியோக அளவுடன் கூடுதலாக ஒரு லிட்டர் மண்ணெண்ணெயை அதாவது தலா மூன்று லிட்டர் வீதம் 1–8–2008 முதல் வழங்கிடலாம் என அரசு இதன் மூலம் ஆணையிடுகிறது.

5. இதுதொடர்பாக உடன் மேல்நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் புதிதாக வழங்கப்பட்டுள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு கூடுதல் மண்ணெண்ணெய் வழங்குவது குறித்து போதிய விளம்பரங்கள் செய்ய தக்க மேல்நடவடிக்கை எடுக்குமாறும் உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் ஆணையாளர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**(க.சண்முகம்)**
**அரசு செயலாளர்.**

பெறுநர்
ஆணையாளர், உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர்
பாதுகாப்புத் துறை, சென்னை–600 005.
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், கீழ்ப்பாக்கம், சென்னை–600 010.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், சென்னை–600 010.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் (உணவுப்பொருள் வழங்கல் மற்றும்
நுகர்வோர் பாதுகாப்புத் துறை மூலமாக),
மாண்புமிகு உணவுத் துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர்,
சென்னை–600 009.
தேசிய தகவல் மையம், சென்னை–600 009.
இயக்குநர், செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை,
சென்னை–600 009.(இச்செய்தியை பத்திரிகைகளில் வெளியிட)
இருப்புக் கோப்பு .

**ஆணைப்படி / அனுப்பப்படுகிறது**

**பிரிவு அலுவலர்.**